தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.35

# Introduction to Pazhaman, and the Characterization and Structure of the Novel Nandhiyavattam

**M. Jennifer Amalda***,
[1]Assistant Professor, Department of Tamil, RVS Technical Campus, Coimbatore – 641402,
*Corresponding Author Email: amaldatheresa@gmail.com.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 20-July-2026

## ABSTRACT

A Study of Kongu Regional Novel Literature and the Social Impact of Water Scarcity Novel literature is a widely cherished genre that depicts human life and events—either real or imagined—in prose form. Over time, regional literature from the Kongu region of Tamil Nadu has evolved to realistically portray the living conditions, culture, traditional lifestyles, and characterization within its narratives.

This study focuses on analyzing the characters, setting, narrative style, and themes depicted by the author. Specifically, it explores how water—a fundamental necessity for all living beings—impacts human existence. The research highlights the harsh reality that poverty is not limited to food, but extends to water scarcity as well. Ultimately, this study aims to reveal how water shortage acts as a critical turning point in an individual's life, driving changes in daily activities and giving rise to pressing social issues like forced migration.

***KEYWORDS:*** *Novel Literature, Kongu Region Literature, Water Scarcity, Social Impact, Forced Migration, Regional Novels, Tamil Literature, Characterization.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

# “பழமனின் அறிமுகமும் - நந்தியாவட்டம் புதினத்தின் பாத்திரப்படைப்பும் – கட்டமைப்பும்”

**[*]மா.ஜெனிபர் அமல்டா,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ்.தொழில்நுட்பக் கல்லூரி,

சூலூர், கோயம்புத்தூர் – 641402

**முன்னுரை:**

புதின இலக்கியம் என்பது எல்லோராலும் விரும்பி ஒரு இலக்கியமாகும். பொதுவாக படிக்கக்கூடிய புதினங்களில் ஒரு மனிதனின் வாழ்க்கையும், வாழ்க்கை நிகழ்வுகளும் கற்பனையாகவோ அல்லது உண்மை சம்பவங்களாகவும் உரைநடையில் எழுதப்படுகின்றனர். இவ்வாறாக புதின இலக்கியங்கள் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றாலும் அவற்றுள் கொங்கு நாட்டின் வட்டார புதினங்களும் பெரும்பாலும் ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையை சித்தரிக்க கூடியதாக அமைகிறது . பழமன் அவர்களின் வாழ்க்கை முறைகளும் விருதுகள் மற்றும் புதின ஆசிரியர் புதினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாத்திரப் படைப்புகளின் தன்மை குறித்தும் எழுத்தாளர் புதினத்தில் கையாளப்பட்டுள்ள கதை மாந்தர்கள், கதைக்களம், மொழிநடை சிந்தனைகள் குறித்தான செய்திகளை மட்டும் எடுத்து இயங்குவதாக அமைகிறது.

**ஆய்வு நோக்கம்:**

மனிதனின் அன்றாடம் தேவைகளில் நீர் முக்கியமானதாக கருதப்படுகிறது. வறுமை என்பது உணவுப் பொருட்களில் மட்டுமல்ல தண்ணீரை பெறுவதிலும் கூடத்தான் என்றாகிவிட்டது தற்போதைய நிலை.அனைத்து உயிர்களின் வாழ்விற்கும் ஆதாரமாக விளங்க கூடியவையாக உள்ளது நீரின்மையால் ஒரு மனிதனின் வாழ்க்கையானது எவ்வாறு திருப்புமுனையாக அமைகிறது என்பதனையும், இதனால் மனிதனின் அன்றாட செயல்பாடுகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களும்,புலம்பெயர்வு போன்ற பிரச்சனைகளை வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுக் கருதுகோள்:**

இயற்கை நமக்கு அளித்துள்ள பெரும் கொடை நீராகும். இவ்வாறாக இருக்கின்ற நிலையில் கொங்கு வட்டார மண்ணினை சார்ந்த மக்கள் விவசாயத் தொழிலில் நீரின்மையால் வறண்ட நிலை மின்சார கட்டணம் வறுமை போன்ற பிரச்சனைகள் தங்களின் தொழிலில் தலை தூங்கி இருப்பினும் தங்களது அழியா குலத் தொழிலை பாதுகாக்க விவசாயினர் மக்கள் அயராது போராடி தங்கள் தொழிலை மீட்டெடுக்க முயற்சிக்கும் வண்ணம் செயல்படுகின்றனர் என்பது ஆய்வின் கருது கோள் ஆகும்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**ஆய்வு ஆதாரங்கள் :**

1) முதன்மை சான்றாதாரங்கள்:

நந்தியாவட்டம் என்னும் புதினம் இவ்வாய்வின் முதன்மை சான்றாதாரமாக அமைந்துள்ளது.

**துணைமைச் சான்றாதாரங்கள்:**

இவ்வாய்வு புதினத்தை பற்றிய ஆய்வு என்பதால் புதினங்களோடு தொடர்புடைய இலக்கிய வரலாற்று நூல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள் விவசாயம் சார்ந்த நூல்கள், எழுத்தாளர் பழமன் அவர்களிடம் நேர்காணலில் சேகரித்த செய்திகள்,இணைய வழி செய்திகள், போன்றவை இவ்வாய்வின் துணைமைச் சான்றாதாரமாக அமைகின்றது.

**ஆய்வு முன்னோடி:**

"பழமனின் புதினங்களில் கொங்கு நாட்டியல்"
ஆய்வியல் நிறைஞர் பட்டத்தின் ஒரு பகுதியாக ஆய்வு
திருமதி.ராஜி
கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி,
நவம்பர் – 2013

**ஆய்வு அணுகுமுறை:**

எந்த ஒரு ஆய்விலும் தகவல்களை தொகுப்பது என்பது ஆய்வாளரின் தலையாயக் கடமையாகும் ஆகவே அவ்வா அடிப்படையில் இவ்வாய்வானது பகுப்பு முறை, விளக்க முறை அணுகுமுறையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

பழமனின் அறிமுகமும்- நந்தியாவட்டம் புதினத்தின்

பாத்திரப்படைப்பும் – கட்டமைப்பும்

**இயல் விளக்கம் :**

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட புதினங்கள் ஒவ்வொன்றில் கதை போக்கும் ஆய்வேட்டுக்குள் செல்பவர்களுக்கு இன்றியமையாததாகும். அதுபோலவே புதின எழுத்தாளரின் படைப்புகள் அவர்களுக்கு ஆய்வுப் போக்கை புரிந்து கொள்வதற்கு மேலும் துணை நிற்பனவாகும். எனவே இதனை,

" அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
அடுத்தது காட்டும் முகம்" (குறள் – 706)

என்னும் வள்ளுவரின் குறளினிற்கேற்ப அவ்வாறாக எழுத்தாளர் பல மணி வாழ்க்கை பின்புறமும் அவர்களது படைப்பிற்கு அடிப்படையாக அமைந்திருக்க கூடும் எனவே எழுத்தாளர் பழமன் அவர்களின் வாழ்க்கை முறைகளும் விருதுகள் மற்றும் புதின ஆசிரியர் புதினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாத்திரப் படைப்புகளின் தன்மை குறித்தும் எழுத்தாளர் புதினத்தில் கையாளப்பட்டுள்ள கதை மாந்தர்கள், கதைக்களம், மொழிநடை சிந்தனைகள் குறித்தான செய்திகளை மட்டும் எடுத்து இயங்குவதாக அமைகிறது.

**பழமனின் வாழ்க்கை :**

புதின ஆசிரியரின் பெயர் - எஸ்.பழனிச்சாமி

ஊர் - கோவையை அடுத்த கீரணத்தம் என்னும் சிற்றூர்

புனைப்பெயர் - பழமன்

குடும்ப பின்னணி - ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

பணி - பட்டதாரி ஆசிரியராக அரசு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர

இலக்கியப் பணி - கல்லூரி நாட்கள் முதல் கவிதையில் மோகம் கொண்ட இவர் கவிஞர் கண்ணதாசனின் தென்றல் பத்திரிக்கை மூலம் அறிமுகமானவர். மரபு கவிதை புதினம், குறும்பு புதினங்களை படைத்து வந்துள்ளார்.

கவிதை நூல்கள் - பருவங்கள், கடைசி கவிதைகள் மனச்சுவடுகள், மரபில் பூத்த மலர்கள்

புதினங்கள் - ஒத்தப்பனை, நந்தியாவட்டம் தலைசசுமை கள்ளிக்கென்ன வேணும்

இலக்கியச் சிறப்பு - கோவையைச் சுற்றியுள்ள பகுதிகளை கதைக்களங்களாகக் கொண்டு கொங்கு வட்டார மக்களின் வாழ்வியலை, கொங்கு மொழியிலே பதிவு செய்து வருகின்றார். ‘நந்தியாவட்டம்’ புதினம் கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியிலும், பொள்ளாச்சி என்.ஜி.எம் கல்லூரியிலும் பாட நூலாக வைக்கப்பட்டது.இவரின் படைப்புகள் குறித்தான விமர்சனங்கள்,கருத்துரைகள் அச்சு ஊடகங்களிலும்,இணைய ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.

**புதின ஆசிரியரின் ஆக்கங்களும் விருதுகளும்:**

நந்தியாவட்டம் புதினத்தின் ஆசிரியரின் ஆக்கங்களும் விருதுகளும் பின்வருமாறு:

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

- தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் என்ற அமைப்பு சார்பாக நடைபெற்ற போட்டியில் சிறந்த புதினம் என்னும் பரிசு எட்டயபுரம் பாரதி விழாவில் பரிசு பெற்றது.

- தமிழ்நாடு பாரத ஸ்டேட் வங்கி சார்பாக ஆண்டுதோறும் நடைபெறும் இலக்கிய விழாவில் சிறந்த புதினத்தை தேர்வு செய்து பரிசு வழங்குவர்.அவ்வகையில் 2008 ஆம் ஆண்டிற்கான சிறந்த புதினம் என தேர்வு செய்து சென்னையில் நடைபெற்ற விழாவில் “பாரத ஸ்டேட் “ விருது வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு “இலக்கிய பீடம்” என்ற மாத இதழில் பழமனின் ' ‘கள்ளிக்கென்ன வேலி’ புதினம் சிறந்த புதினம் என்னும் அடிப்படையில் “இலக்கிய பீடம் “ என்ற விருதையும் எழுத்தாளர் பழமன் பெற்றுள்ளார்.

- திருப்பூரில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் இந்த நந்தியாவட்டம் பதினத்தினை பாராட்டும் விதமாக நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தனர

**கதைக்களம்:**

ஓர் இலக்கியம் படைக்கப்படும் பொழுது அந்த இலக்கியத்திற்கான கதை நிகழும் இடம் முக்கியமானதாக அமைதல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தவும் , இவ்வுலகில் எல்லாவற்றுக்கும் நிலமும், பொழுதும், களமும், காலமும் அடிப்படையாக அமைகின்றன என்பதை எடுத்துரைக்க தொல்காப்பியர் இதனை,

“ முதல் எனப் படுவது நிலமும் பொழுதும் இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே”
(தொல்.அகத்.நூ.4)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுள்ளார் . ஆகவே சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ள அந்தந்த நிலம் குறித்த பதிவுகள் இலக்கியம் நிகழும் களத்தை , களத்தின் தேவையை இப்பதிவுகள் எடுத்துக் காட்டுவனவாக இருப்பதைக் காணமுடிகிறது.

புதினத்தின் கதை நிகழும் களமே அந்த புதினத்தின் கதைக்களம் ஆகும். ஒரு புதினத்தின் கதைக்களம் மிகவும் இன்றியமையாதது ஆகும்.கதைக்கு களம் முக்கியமானது என்பதற்கு படைப்பாளிகளும் அறிஞர்களும் கூறியுள்ள கருத்துக்கள் அமைகின்றன.

“நாவலுக்கும் அது விளங்குகின்ற கதைக்கும் இடமும் அந்த இடத்தை சுற்றியுள்ள சூழலும் மிகவும் முக்கியம். இவற்றை பின்புலங்களாக கொண்டு தாங்கள் வேண்டியவற்றை இயல்புற சொல்வதற்கு நாவலாசிரியர்கள் முனைகிறார்கள்.” ( சூரிய காந்தன், விருட்சமும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

விழுதுகளும்,ப.எண்.25) என்று படைப்பாளியும், திறனாய்வாளருமான சூரிய காந்தன் கதைக்களத்தில் முக்கியத்துவத்தை குறிப்பிடுகின்றார்.

'நாவலில் ' கதை நிகழும் இடம், இடப்பிண்ணனி ஆகும். எந்தவொரு கதையுமே ஓர் இடப்பிண்ணனியில் தான் கூற முடியும்.இவ்வாறாக அமைகின்றன அப்படைப்பே ஓர் புதினத்திற்கு ' களம்' என்ற ஒரு கதைக்களம் அமைகிறது.

**நந்தியாவட்டம் புதினத்தின் கதைக்களம்:**

பழமன் என்பவர் எழுதிய 'நந்தியாவட்டம்' என்ற புதினத்தின் கதைக்களமாக கோவையைச் சுற்றியமைந்த ஊரான கீரணத்தம் ஊராட்சி ஒன்றியப் பகுதியே இந்நாவலின் கதைக்களமாக அமைகிறது. கிராமிய சூழ்நிலைகளையே முழுவதுமாக பயன்படுத்தி வட்டார பிண்ணனியோடு இப்புதினம் மண்ணின் மனத்தை பதிவு செய்கிறது.2005 இல் வெளிவந்த இப்புதினம் கடந்த நூற்றாண்டில் வெளிவந்த முக்கிய நிகழ்வுகளையும் பதிவு செய்திருக்கிறது.இந்த பதிவுகளால் இப்புதினம் சிறப்பு பெற்றுள்ளது.

" மணி நாலாகி விட்டது.

பால்கார பொன்னான் இன்னும் வரவில்லை.வழக்கமாக மூணு மூணரைக்கே வந்து விடுவான்.அப்படியே திண்ணை மீது சாய்ந்தேன்.

அடிவானத்தில் தேய்ப்பிறை நிலவு எட்டிப்பார்த்தது. பின்பனிக்காலம் மாசி மாத விறுவிறுப்பு.கீழ்காத்து இலேசாக வீசிக்கொண்டிருந்தது.பள்ளத்தில் திடீரென டுமீல் சத்தம். இது வேட்டைக்காரர்களின் அட்டகாசம்.காடை,கவுதாரி என்று ஏதாவது குறி வைத்திருப்பார்கள்.தென்னை மரத்தில் தூங்கிக் கொண்டிருந்த மயில்களின் அலறல்.ஒன்று ஆரம்பிக்க இன்னொன்று ' நீ பத்திரம் ' என்று அறிவுரை கூறுவது போல் மறுமொழி.

கிழக்கிலிருந்து ஒத்தையடிப் பாதையில் வெளிச்சமும் மொபட் ஒலியும் கலந்து வநதுக் கொண்டிருந்தது. கருநாய் தன் பாஷையில் அதை வரவேற்றது.நான் அரைத் தூக்கத்திலிருந்து மீண்டு கூரைச்சாளை சுவிட்சைப் போட்டேன் " ( பழமன், நந்தியாவட்டம்.அத்.1.ப.எண்.1)

என இவ்வாறாக புதினத்தின் தொடக்கத்தில் இடம் பெற்றுள்ள மேற்கண்ட வரிகள் கதைக்களம் ஒரு வேளாண்மை கிராமத்தையொட்டியது என்பதை எடுத்துக்காட்டக் கூறியவையாக விளங்குகின்றன.

**பாத்திரப்படைப்பும் – கட்டமைப்பும் :**

நாவலின் முக்கியமான அம்சங்களில் ஒன்று பாத்திரப்படைப்பு நாவலின் இயக்கமானது பாத்திரம் சார்ந்தே அமைகிறது சிறு நிகழ்ச்சிகளோ, பெரு நிகழ்ச்சிகளோ ஆங்காங்கே அமைந்து கதாபாத்திரங்களின் உடன் நலன்களை விளக்கி சொல்கின்றன.

எழுத்தாளர்கள் தான் சந்தித்த மனிதர்களை மாதிரியாக கொண்டு எழுத ஆரம்பித்தாலும் ஒரு மனிதனின் நகலாக பாத்திரப்படைப்பு அமையாமல் ஒரு புத்தம் புதிய பாத்திரமாக உருவாக்கிறது சில சமயங்களில் ஆசிரியர் தான் சந்தித்த பல மனிதர்களிடம் பண்புகள் தன்னால் கவரப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து கதை மாந்தர்களை படைக்கிறார் எனலாம். ஒரு தனி மனிதனின் வாழ்க்கை பண்புகளையோ, செயல்களையோ புதினம் தன் கதையில் பயன்படுத்திக்கொள்ளும். அவ்வாறாக, வரக்கூடிய தனித்தனி மனிதர்களின் பண்புகளையும் அவர்களின் செயல்பாடுகளையும் ஆசிரியர் பாத்திரப் படைப்பின் மூலம் வெளிக்கொணர்கிறார்.பாத்திரங்களின் வாழ்வியலை முழுமையாகவோ அதை சுவையான ஒரு பகுதியாகவோ விளங்கிச் சொல்வது புதினத்தின் பணியாகும்.இதையே ஆங்கிலத்தில்‘Characterization ‘ என்பர்.

பாத்திரங்களில் சில பாத்திரங்கள் பேச்சாலும், செயலாலும் வெளிப்படுவதாக அமைகின்றது புதினங்களின் அடிப்படையே பாத்திரப்படைப்பு தன் என்பதை வாழ்க்கையோடு இயைந்த புதினங்கள் வழி உணரலாம்.

**பழமனின் புதினத்தில் பாத்திரங்களின் தன்மை:**

இப்புதினத்தில் வரக்கூடிய செய்திகள் கிராம பகுதியில் வாழும் விவசாய மக்களின் தொழிலை பற்றியும், குறிப்பாக அவர்களது விவசாய தொழிலில் ஏற்படக்கூடிய நீருக்கான போராட்டம், கிணறுகளில் வறட்சி நிலை, மின்சார கட்டணம் உயர்வு போன்ற சிக்கல்களால் விவசாய மக்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய இன்னல்களை பற்றியும் ஆழமாக பேசியுள்ளார். இப்பதினத்தை படிக்கும் பொழுது, ஒவ்வொரு பாத்திரங்களின் பண்பும் செயல்பாடும் நம் கண்முனை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கை இன்னல்களை படம் பிடித்து காட்டுவதாக வெளிக்கொணர்கிறது. இவ்வாறாக பாத்திரங்களின் உருவாக்கம் கதையின் ஒவ்வொரு இடத்திலும் பொருத்தமாக அமைகிறது.

**முதன்மை பாத்திரம்:**

முதன்மை பாத்திரம் என்பது கதையின் தொடக்கம் முதல் இறுதி வரை வரக்கூடிய கதாபாத்திரம் ஆகும். இப்பபாத்திரம் முழுமையாக வளர்ச்சி பெற்றதாகவும் ஆழமான குறிக்கோளினை உடையதாகவும் அமையும். நாவல் படிக்கும் எந்த ஒரு வாசகனும் தாங்கள் வாழ்கின்ற சமூகத்தினை சார்ந்த நிலை தொழிலில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் போன்றவற்றை

தெரிந்து கொள்வதற்கு துணை நிற்பது முதன்மை பாத்திரம் ஆகும். மேலும் அவ்வகையில் இப்புதினத்தில் முதன்மை கதாபாத்திரமாக அமைவது கதை சொல்லி என்னும் கதாபாத்திரம்.

**கதைச் சொல்லி:**

கதாபாத்திரமாக கருதப்படுகிறது. இதில் வரக்கூடிய கதைச்சொல்லி இப்புதினத்தின் ஆசிரியரே. இவரே முதன்மை பாத்திரமாக விளங்குகிறார். ஏழ்மையான விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கதைச்சொல்லி தான் வாழும் விவசாய குடும்பத்தில் கிராமப் பகுதியில் வசித்து வருகின்ற மக்களின் நிலையை புதினத்தின் மூலம் படம் பிடித்து காட்டுபவராக திகழ்கிறார். மூ.வா வின் வாசகராக இருந்த கதைச்சொல்லி பிறகு கதைப்போக்கில் அண்ணாவின் வாசகராக மாறுகிறார். பத்திரிக்கை ஆர்வளராக இருந்தவர் பிறகு தனது நண்பனின் தூண்டுதலால் சிறகிலிருந்து பறந்து அவருடைய வாழ்வின் அனுபவங்கள் அண்ணாவின் தீவிர ரசிகையாய் மாறி, கடிதம் எழுதுதல், அரசியலில் ஈடுபடுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். புதினத்தில் வரக்கூடிய கதை மாந்தர்கள் அனைவரையும் அறிமுகம் செய்து வைப்பவராகவே கதைச்சொல்லி திகழ்கிறார் அரசு பள்ளியில் பயின்றவர் பத்தாம் வகுப்பில் கணித தேர்வில் தோல்வியடைந்து அதன் பிறகு தேர்ச்சி பெற்று, ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து கல்வி பயின்று அதன் பிறகு அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தவர். ஆசிரியர் பணி புரிந்தாலும் இருப்பினும் விவசாய தொழில் புரிந்து வாழ்ந்து வருகிறார் கதைச்சொல்லி கவிதைகள் எழுதுதல், சினிமா காணுதல் போன்ற செயல்களில் மிகவும் ஆர்வமுள்ளவராக இருந்துவந்த கதை சொல்லி, சினிமாவில் பாடல் வரிகளை எழுதுவதில் மிகவும் ஆர்வமாக இருந்தார். தனது தோழர் மூலம் சென்னைக்கு பாடலாசிரியராக பணிபுரிய சென்று அங்கு நேர்முகத் தேர்வில் பங்கேற்றார் அதில் பாடலாசிரியர் கவிதைகளை கூறும்படியாக கேட்கிறார். அதற்கு கதைச்சொல்லி கவிதைகளை குறிப்பிடுகிறார் தனது கற்பனைக்கு விட்ட சவாலாக எடுத்துக்கொண்டு எழுதத் தொடங்கினார் வார்த்தை சிறகடித்து வந்தனர்.

“ கனவுகளெல்லாம் கனவுகளாக
மகிழ்ந்தே பாடுகிறேன் – என்மனதில் இன்ப வீணையை மீட்டி
காவியம் புனைந்திடுவேன்”

(பழமன், நந்தியாவட்டம்,அத்.1 ,ப.எண்.21)

என்ற கவிதை வரியினை மிகவும் அழகான முறையில் இசை அமைப்பாளரிடம் கதை சொல்லி தந்து விடுகிறார். அதன் பிறகு பாராட்டு பெற்ற பின், இசையமைப்பாளர் தயாரிப்பாளர் இடையே ஏதோ சிறு பிரச்சனை காரணமாக கதைச்சொல்லிக்கு பாடலசிரியர் வாய்ப்பு பறிபோனது. அதன் பிறகு கதை சொல்லி தான் வாழக்கூடிய சுற்றுப்புற மக்களின் குறிப்பாக விவசாய மக்களின் வாழ்க்கை அனுபவங்கள், நிலத்தடி நீர் இல்லாத நிலை, உயிர்பலி போன்ற இன்னல்கள் விவசாயிகளின் வாழ்வில் ஏற்பட்டதால் அவற்றை எடுத்துரைக்கும் விதமாக இப்புதினத்தை கதைச்சொல்லி இயற்றியுள்ளார். பாத்திரப்படைப்புகளில் மிக உயர்ந்த மிகவும் உயர்ந்த மனிதராகவே கதை

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

சொல்லி திகழ்கிறார். ஒரு சாமானிய மக்களின் விருப்பு வெறுப்புக்கள், ஆசைகள் போன்றவற்றை எடுத்துரைப்பவராகவே இதில் முதன்மை கதாபாத்திரமாக கதைச்சொல்லி ஈடுபடுகிறார்.

**துணைமைக் கதாபாத்திரம் :**

ஒரு கதையின் நிகழ்வுக்கும் முடிவுக்கு துணையாக நிற்பது துணைமை பாத்திரம் ஆகும் துணைமை பாத்திரங்களின் செயல்பாடு ஆனது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் நாவலாசிரியர் தம் கதையோட்டத்தில் சொல்ல வரும் கருத்துக்களையும், திருப்பங்களையும், இவர்களைக் கொண்டே செயல்படுத்துகிறார் கதைச்சொல்லியாளர் இப்புதினத்தின் ஆசிரியரே ஆவார். இவரே மருதையன் என்னும் கதாபாத்திரத்தினை அறிமுகம் செய்து வைக்கிறார். இப்போது நேரத்தில் பெரும்பாலாக வாழ்க்கை நிகழ்வுகள் உண்மை சம்பவங்கள் திருவிழாக்கள் சடங்குகள் விவசாயிகளின் போராட்டம் சார்ந்த நிகழ்வுகளை படம் பிடித்து காட்டுவதாக இப்புதினத்தின் துணைமைக் கதாபாத்திரம் சிறப்புடையதாக விளங்குகிறது.

**துணைமைப் பாத்திரம் – மருதையன் :**

இப்புதினத்தில் வரக்கூடிய துணைமைக் கதாபாத்திரம் மருதையன் என்பவர் ஆவார். மருதையின் என்பவர் ஒரு மாமனிதனாகவே இப்போது நேரத்தில், கருதப்படுகிறார் . வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு கதாபாத்திரமாக இருந்தவர் என எழுத்தாளர் குறிப்பிடுகிறார் (நேர்காணல்)

இவருடைய குடும்பத்தினர் விவசாயத்தில் பாதிக்கப்பட்டு பின்னர் நிலத்தை இழந்து சாதாரண ஒரு மனிதர் ஆகிவிட்டனர். இவரது குடும்பம் வாழ்ந்துக் கெட்ட குடும்பம். இவரது தந்தையார் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு பிறகு பஞ்சுத்தொழில் வணிகத்தில் இறங்கியவர் பிறகு சிறிது நாட்களுக்கு பிற நாட்களில் தந்தை இறந்து விடுகிறார். அப்போது மருதையன் படிப்பானது பாதையில் நின்று போனது. இவரது வாழ்க்கையில் பல திருப்பங்களும், குடும்பத்தில் வறுமையான நிலையும், மென்மேலும் தலைதூங்கி நின்றது. இதனால் மருதையன் தனது நிலங்களை எல்லாம் விற்று இறுதியாக அங்கிருந்த ஒரு ‘நந்தியாவட்டம்’ என்னும் செடியை மட்டும் எடுத்துக்கொண்டு வந்து அவரது நண்பரான கதைச் சொல்லின் நிலத்தில் நட்டு வைக்கின்றார். நிலங்களை எல்லாம் இழந்த பிறகு மருதையன் ஒரு பஞ்சாலை பணியில் அமர்ந்தார். அதன் பிறகு திருமணத்திற்கு பின் சிறிது காலத்திலேயே மருதையன் மனைவி இறந்துவிட்டார் பின் தன் மகனை தந்தையின் வீட்டில் வளர்த்து வந்து பிறகு தந்தையின் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்கிறார் பாத்திரத்தில் வரக்கூடிய மருதையன் ஒரு உயர்ந்த மனிதனாகவே கருதப்படுகிறார் மருதையின் ஒரு சிறந்த படைப்பாளி அதோடு மட்டுமல்லாமல் ஒரு பொதுநல ஆர்வலராக இருந்து மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு விஷயம் அவர் சாதிகளை கடந்தவராக விளங்குகிறார்.இதனை ,

“ சாத்த ரம்பல பேசுஞ் சழக்கர்கள்
கோத்திர ரமுங் குழமுங்கொண் டென்செய்வீர்” ( திருஞான.தேவா.ப.5.60.3)

என்னும் வரிகள் நமக்கு ஜாதி உணர்வை விடுத்து அன்பால் நெஞ்சை ஒருவருக்கொருவர் நிறைத்து பனிவேர் என்ற அடிகளுக்கு ஏற்ப மருதையின் அவருடைய காலத்திலேயே கிராமத்திலே தலித் மக்களுக்கு என்று சுடுகாடு இல்லாமல் பெரிதும் அவதிப்பட்டபோது அவர் முக்கிய அலுவலர்கள் பஞ்சாயத்து தலைவர்கள் என எல்லோரிடமும் சென்று கோரிக்கையை நிறைவேற்றியதோடு தன் இறந்தால் இந்த தலித்துகளின் இடத்தில் தான் தன்னை அடக்கம் செய்ய வேண்டும் என்று தான் இறப்பதற்கு முன் இறுதி வார்த்தையாக இவ்வாறு கூறிவிட்டு,

"நான் போயிட்டா என்னை தலித்துக சுடுகாட்டில் அடக்கம்
பண்ணுங்கோ " என்றபடியே தலை சாய்ந்தார்.
(பழ.நந்தி.ப.118)

இவ்வாறாக மருதையனின் இறப்பிற்கு முன் கூறி இறந்துவிட்டதை இப்போதினம் காட்டுகிறது மனிதர்கள் இறப்பிலாவது ஒற்றுமை உணர்வை எப்பொழுதும் கொண்டிருக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பை கொண்ட பாத்திரப்படைப்பாளியாகவே மருதயன் தனது வாழ்க்கை முழுவதையும் பிறருக்காக தொண்டாற்றி வாழ்ந்தவராக கருதப்படுகிறார்.

**கதைச்சொல்லி மனைவி - மீனாட்சி :**

இப்புதினத்தில் துனணமைக் கதாபாத்திரத்தில் வரக்கூடிய மருதையனுக்கு பின் வரக்கூடிய பாத்திரமாக கதைச் சொல்லின் மனைவி மீனாட்சி விளங்குகிறார். இதில் மீனாட்சி கதைச்சொல்லியின் இல்லத்தில் அவ்வப்போது ஏற்படுகின்ற உரையாடலில் கலந்துக் கொள்பவராக விளங்குகிறார். இதில் முக்கியமாக இவரைப் பற்றி குறிப்பிடுவதற்கு அவ்வளவாக செய்திகள் இல்லை என்றாலும் கதை சொல்லிக்கு இக்கதையில் பக்கபலமாக இருக்கக்கூடிய பாத்திரமாக மீனாட்சி கருதப்படுகிறாள். அதேபோன்று குடும்பப் பணிகளை மிகவும் சிறப்பாக மேற்கொள்பவர்களாகவும் விருந்தினர்களை நல்ல முறையில் உபசரிக்க கூடிய உலகங்களை கொண்டவர்களாக இப்புதினத்தில் மீனாட்சி விளங்குகிறார்.

**பிற கதாபாத்திரங்கள் :**

துணைமைக் கதாபாத்திரங்களுக்கு அடுத்ததாக குறிப்பிடக்கூடிய வகையில் பிற கதாபாத்திரங்கள் அமைகின்றனர். கதாபாத்திரங்கள் ஆங்காங்கே இடம்பெறக்கூடிய வகையில் அமைகின்றனர் அவ்வகையில் இப்புதினத்தில் இடம்பெறக்கூடிய கதாபாத்திரங்கள் குறிப்பிடக் கூடிய வகையில் அமைந்துள்ளது அவற்றுள் ,

ஊர் மணியக்காரர், நிலத்தடி நீர் கண்டுபிடிக்கும் ஜோசியர் ரங்கசாமி, ஊர் நாவிதர், தோட்டத்தில் வேலை செய்யும் பழனி, மாட்டுத் தரகர் ராமியன், இளநீர் வியாபாரி பாலன், மின்சார அலுவலகத்தில் பணிபுரியும் எல் ஐ (லோக்கல் இன்ஜினியர்) வேலித்தோட்டம் நாராயணசாமி, மின்வாரிய இஞ்சினியர் சீனு, முத்துச்சாமி பள்ளி ஆசிரியர், துரைசாமி எட்டிமடை ஜோதிடர், கர்நாடகாவுக்கு சென்று விவசாயம் செய்யும் கந்தசாமி, குப்பண்ணன், ராயப்பன்,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

கதைச்சொல்லின் பங்காளி பெரியசாமி, அரசியல்வாதி மாணிக்கம், பால்காரன் பொன்னான், பத்ரான், கோவிந்தராஜ், கலைச்சொல்லின் மகன் குமார் , மருதையனுக்கு மருத்துவம் பார்க்க வந்த மருத்துவர் ஆகிய கதை மாந்தர்கள் இப்புதினத்தின் ஓரிரு நிகழ்வுகளில் பங்கு பெறுகின்றனர்.

**பாத்திரப் படைப்பின் இன்றியமையாமை:**

ஒரு புதினத்தின் பாத்திரப்படைப்பு தான் ஒரு கதையை உயிரோட்டமாக வைத்திருப்பதற்கு அடிப்படையாகும்.எனவே பாத்திரங்களின் வாயிலாக தான் கதை நிகழ்கிறது கதாபாத்திரங்கள் இல்லையேல் கதையில்லை. கதை பின்னலும் இல்லை , நிகழ்ச்சிகள் இல்லை புதினத்தின் உயிரோட்டமாக இருப்பது பாத்திரப்படைப்பே .பாத்திரங்களை மனதில் உருவாக்கிக் கொண்டு அவற்றிற்காக புதினங்களை எழுதிய புதின ஆசிரியர்கள் இருக்கிறனர்.எனவே ஒரு புதின படைப்பாளன் பாத்திரப்படைப்பில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும். மிகச்சிறந்த புதினங்களே வரும் பாத்திரங்கள் தம் கண் முன் நடமாடும் மனிதர்களாகவே காணப்படுகின்றனர் .அவ்வகையில் நந்தியாவட்டம் என்ற இப்புதினத்தில் வரக்கூடிய பாத்திரப்படைப்புகளை மிக அழகான முறையில் எழுத்தாளர் கையாண்டு உள்ளார். கிராமிய சூழல்களோடு மக்கள் தங்கள் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளை ஆசிரியர் பழமன் ஒவ்வொரு பாத்திரங்களின் வாயிலாக தனது உண்மை சம்பவங்களை இப்புதினத்தில் எடுத்துரைப்பதாக அமைகிறது. எனவே ஒவ்வொரு புதிய புதினத்திற்கும் பாத்திரங்கள் இன்றியமையாததாகவே அமைகின்றது என்பது சந்தேகமில்லை.

**மொழி நடை :**

மொழிநடை என்பது வாசகர்களை ஈர்க்கும் வண்ணம் எளிமையானதாகவும் எதார்த்தமானதாகவும் அமைந்திருக்கும் . மொழிநடையை Style என்று ஆங்கிலத்திலும் பாணி என்று வடமொழியிலும் கூறுவர் அதற்கேற்ப இப்புதினத்தை கொங்கு தமிழில் படைத்துள்ளார் ஆசிரியர். அதோடு மட்டுமல்லாமல் கொங்கு வட்டார சொற்களை மையமாகக் கொண்டு மக்கள் தங்கள் நடைமுறை வாழ்வில் பேசுகின்ற சொற்களை அப்படியே கையாண்டு உள்ளார். ஆசிரியரின் இந்நடையை பாராட்டி அவருடைய பெத்த வயிறு சிறுகதை தொகுப்பில்,

**"கதைகளை பார்த்து முடித்த பிறகு –**

கொங்கு நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் எளிய ஆனால் நல்ல மனிதர்களுடன் பல நாட்கள் இருந்து வாழ்ந்த அனுபவம் நமக்கும் ஏற்படுகிறது என்று முல்லை ஆதவன் குறிப்பிடுகிறார்.

**தொகுப்புரை:**

- புதின எழுத்தாளரின் வாழ்க்கை குறிப்பும், அவரின் படைப்பாக்கத் திறன் மூலம் அவர் பெற்ற விருதுகளையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

- நந்தியாவட்டம் புதினத்தில் உருவாக கூடிய கதைக்களமானது இப்போதினம் உருவான சூழ்நிலையை நமக்கு உணர்த்தக்கூடிய வகையில் அமைந்துள்ளதை நம்மால் காண முடிகிறது.

- எழுத்தாளர் பழமன் அவர்கள் தம் புதினத்தில் கையாண்டுள்ள பாத்திரப்படைப்புகளின் தன்மையையும் இப் பாத்திரப்படைப்புகளைக் கொண்டு தமது அனுபவத்தை எடுத்துரைப்பதையும் புதினத்தின் மூலம் நாம் புரிந்து கொள்ள கூடிய வகையில் அமைகிறது.

- ஒரு புதினத்தின் அடிநாதமாக விளங்கக்கூடிய பாத்திரங்களின் இன்றியமையாத நிலையை எவ்வாறாக உள்ளது என்பதையும், குறிப்பாக நந்தியாவட்டம் புதினத்தில் எவ்வாறாக மேலோங்கி உள்ளது என்பதை குறிப்பிடக் கூடிய வகையில் அமைகிறது.

- இப்புதினத்தில் ஆசிரியர் பழமன் மேற்கொண்ட மொழிநடைகளையும், வட்டார சொற்களைக் கொண்டு பயன்படுத்தி எழுதப்பட்டதையும், கொங்கு மண்ணின் அழியாத வாழ்வியலை வட்டார மொழியோடு ஆசிரியர் தனது வாழ்வில் நடந்த சம்பவங்களையும் குறிப்பிட்ட முறையை எடுத்துரைக்கிறது.

**அடிக்குறிப்புகள்:**

[1]. திருக்குறள் – அமைச்சியல் ( குறள் – 706)

[2]. தொல்.பொரு.(அகத்.நூற்.4)

[3]. சூரியகாந்தன், விருட்சமும் விழுதுகளும் (ப.25)

[4]. பழமன், நந்தியாவட்டம் (அத்.1,ப.1)

[5]. நந்தியாவட்டம் (அத்.2 ,ப.17)

[6]. திருஞானசம்பந்தர்.(தேவா.5.ப.60.3)

[7]. நந்தியாவட்டம் (ப.118)

[8]. முல்லை ஆதவன், பெத்த வயிறு

**நெறிசார் வெளிப்பாடு - முரண்பாடுகளின் பிரகடனம் (Author Declaration of Conflict of Interest)**

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வு தொடர்பான தரவுகள், பகுப்பாய்வுகள் மற்றும் முடிவுகளில் எவ்விதமான நிதி சார்ந்த அல்லது தனிநபர் சார்ந்த முரண்பாடுகளையும் (Conflict of Interest) கொண்டிருக்கவில்லை எனப் பிரகடனம் செய்கிறார். இவ்வாய்வு முற்றிலும் கல்வி மற்றும் சமூக விழிப்புணர்வு நோக்கத்திற்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.